மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின்
செயல்முறைகள், சென்னை – 06.

ந.க.எண்.000523/எஃப் 1/2023 நாள் 03.08.2023

பொருள்: சென்னை– 6 – மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் – 1–5ஆம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பணித்திறன் மேம்பாட்டுப் பயிற்சி – வட்டார/குறு வள மைய அளவில் 1 முதல் 5 வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு 05.08.2023 அன்று நடைபெறுதல் – தொடர்பாக.

பார்வை:

1. 2023 – 2024 ஆம் கல்வி ஆண்டிற்கான பயிற்சிக் கால அட்டவணை
2. மாநிலத் திட்ட இயக்குநர் தலைமையில் நடைபெற்ற கலந்தாலோசனை கூட்டப் பொருள், நாள். 01.07.2023 மற்றும் 19.07.2023.
3. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் அவர்களது கடிதம், ந.க.எண். 000523/எஃப்1/2023 நாள்.23.07.2023.

-----

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இணைந்து ஆசிரியர்களுக்கு பல்வேறு பணித்திறன் மேம்பாட்டு பயிற்சிகள் 2023–2024 ஆம் கல்வியாண்டிற்கென திட்டமிட்டவாறு நடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில், அதன் ஒரு பகுதியாக, அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு நடத்தி வரப்படும் (CRC) ஆகஸ்டு மாதத்திற்கான வட்டார/குறு வள மைய அளவில் 1 முதல் 3 ஆம் வகுப்புகளுக்கு 05.08.2023 அன்றும், 4 மற்றும் 5 ஆம் வகுப்புகளுக்கு 12.08.2023 அன்றும் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த நிலையில், நிருவாக காரணங்களுக்காக, **1 முதல் 5ஆம் வகுப்புகளுக்கு இரு வேறு நாட்களுக்குப் பதிலாக, 05.08.2023 அன்று ஒரே நாளில் நடைபெறும்** எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இப்பயிற்சி சார்ந்த அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்ள அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள் மற்றும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

| வ.எண் | தேதி | வகுப்பு | குறுவள மையம் |
|---|---|---|---|
| 1 | 05.08.2023 | 1 முதல் 5 வகுப்புகள் | குறு / வட்டார வள மைய அளவில் |

இயக்குநர்

பெறுநர்

1. அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள்.
2. அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்.

நகல்

1. மாநிலத்திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை–06 தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

2. இயக்குநர், பள்ளிக்கல்வி இயக்ககம், சென்னை–06.

3. இயக்குநர், தொடக்கக்கல்வி இயக்ககம், சென்னை–06.

4. கோப்பிற்கு.